# சித்தமருத்துவ மூலதத்துவ அறிமுகம்




சித்த மருத்துவம் ஆரம்பத்தில் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. முற்காலத்தில் தத்துவங்களைப் புரிந்து கொண்டு தம்மையும் மேம்படுத்தி, தாம் வாழ்ந்த சமூகத்தையும் மேம்படுத்தி, சித்தவைத்தியர்கள் பெரும் பணி புரிந்துள்ளார்கள். சித்தமருத்துவ அடிப்படைத் தத்துவங்களை தெளிவாகப் புரிந்து கொண்டு தம்மையும் தம் அறிவு நிலையையும் மேம்படுத்திக் கொண்டதால் தான் அவர்களால் நோயை சரிவர கண்டறிந்து பரிகரிக்க முடிந்தது. **சித்தம்** என்பது **முழுமை** என்று கூறப்படும்.

{Siddha is a Tamil word derived from “Siddhi” Attaining Perfection in Life or Heavenly Bliss (வாழ்க்கையில் முழுமையடைதல் அல்லது பரலோகப்பேரின்பம்)}.

மக்கள் விரும்பும் இன்பம் 2 வகைப்படும்.

1. சிற்றின்பம் -Temporary happiness
2. பேரின்பம் - Eternal happiness

**சிற்றின்பம்** என்பது தற்காலிகமான இன்பம், நிலையற்றது, எந்நாளும் அனுபவிக்க முடியாதது.

**பேரின்பம்** என்பது என்றும் அழியாதது, எக்காலத்திலும் அனுபவிக்கக்கூடியது. கடவுளால் பெறக்கூடிய பேரின்பத்தை அடைவதற்கு அடிப்படையாக அமைபவை,

1. அறம்
2. பொருள்
3. இன்பம்
4. வீடுபேறு (bliss)

முதல் மூன்றையும் கைப்பற்றி நன்னெறியில் ஒழுகுவாராயின் ஒருவர் நிரந்தரமான மோட்சத்தை / வீடுபேற்றை பெறலாம். ஆயினும் மக்களின் உடலோ பிறவி, பிணி, துன்பம் இவற்றால் பற்றப்பட்டதுடன் நிலையற்றதாயும் உள்ளது. இதனால் வீடுபேற்றிக்குரிய பலனை பெற இயலாது துன்புறுகின்றனர். அத்துன்பத்திலிருந்து நீங்கி அப்பயனை அடைவதற்கு நீண்ட ஆயுள் வேண்டும்.

சித்தமூலதத்துவம் இந்நீண்ட ஆயுளைப் பெறுவதற்குரிய வழிவகைகளைக் எடுத்துக் கூறுகின்றது. மருத்துவநூல்களின் கொள்கையின்படி இன்பதுன்பங்களை நுகருவது உயிருடன் கூடிய உடலாகும்.

## சித்த மருத்துவத்தின் தோற்றம்





சித்தமருத்துவத்தின் மூலகர்த்தா – சிவபெருமான்
சித்த மருத்தவத்தின் தந்தை – அகத்தியர்

- சித்தமருத்துவமானது ஆரம்பத்தில் **சிவபெருமானிடமிருந்து** அவருடைய மனைவியான **உமாதேவியாருக்கு** சொல்லப்பட்டது. சிவபெருமான் முழுமுதற் சித்தராக கருதப்படுகின்றார்.

- உமாதேவியார் இவ் இரகசியத்தை **நந்தி தேவருக்கும்**, அவர் பின்னர் **தன்வந்திரிக்கும்** (விண்ணக வைத்தியர்), அவர் **அசுவினி தேவர்களுக்கும்** (இரட்டையர்கள்) கூறினார்.

- **அகஸ்தியர் / குறுமுனி** இவ் இரட்டையர்களிடமிருந்து சித்தமருத்துவ அறிவைப் பெற்று அதை **புலஸ்தியருக்கு** வெளிப்படுத்தினார்.

- புலஸ்தியர் தனது சீடரான **தர்மசுவாமியாருக்கு** வழங்கினார்.

- **தேரையர்** தர்மசுவாமியிடமிருந்து சித்தமூலதத்துவத்தை கற்றுணர்ந்தார். இவரே சித்தமூலதத்துவத்தை பல சித்தர்கள் மூலம் தென் தமிழ்நாட்டில் மேலும் பரவச்செய்தவர்.

- இன்னொரு சாரார் சித்தமூலதத்துவம் ஆரம்பமானதற்கு **திருமூலர்** ஆரம்பகர்த்தாவாக அமைந்தார் என்று கூறுகின்றார்கள்.

- **குறிப்பு:**

சில நூல்களில் உமாதேவியார் சித்தமருத்துவ இரகசியத்தை தனது குமாரரான முருகனுக்கு கூறியதாகவும் பின்னர் அது முருகனால் பரப்பப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

முற்காலத்தில் சித்தமருத்துவம் குருசீட முறையில் வளர்ந்து வந்ததால், மாணவர்கள் பல்லாண்டு காலம் தத்துவங்களை ஞானத்தால் உணர்ந்த குருவின் கீழ் பயின்று மருத்துவத்துடன் தத்துவ பயிற்சியை பெற்றனர்.

மருத்துவத்தின் நோக்கம் மக்கள் பிணியின்றி வாழ சுகவாழ்வு வழிவகுத்தலாகும். ஆனால் சித்த மருத்தவம் இதற்கு பின்வருமாறு பயனளிக்கிறது.

“மறுப்பது உடல் நோய் மருந்தெனலாகும்
மறுப்பது உள நோய் மருந்தெனல் சாலும்
மறுப்பது இனி நோய் வராதிருக்க
மறுப்பது சாவை மருந்தெனலாமே”

(திருமூலர் 8000)

அதாவது மரணம் வராமல் தடுப்பதே மருந்து / மருத்துவம் ஆகும் என மேற்கூறிய பாடல் விளக்குகின்றது.

சித்தமருத்துவப்படி ஒருவரின் பூரண ஆயுட்காலம் 100 ஆண்டுகள். ஏனெனில் சித்தர்களின் சித்தமருத்துவத்தின் முக்கிய குறிக்கோள் இறைவனுக்கு இணையாக வாழ்ந்து நிலையான இன்பம் (வீடுபேறு, முத்தி) அடைதல். அவ் உடலை பாதுகாக்க காயகற்பமுறைகளை சித்தர்கள் கூறிவைத்துள்ளனர்.

“உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிரை வளர்த்தேனே”

(திருமந்திரம்)

சித்த மருத்துவ தத்துவங்களை ஆராய்ந்து பார்த்தோமானால் அவை ஒவ்வொன்றும் இந்துமதத்தின் தத்துவங்களில் முக்கிய குறிக்கோளான ஆன்ம ஈடேற்றம் / மோட்சம் பற்றி கூறுகின்றன. உயரிய நிலையை நோக்கியே சித்த மருத்துவம் மக்களை நெறிப்படுத்தும்.

தமிழ் மருத்துவம் சித்த மருத்துவமே என்பதற்கு சில அடிப்படைகள் ஒற்றுமையாக காணப்படுகின்றது. தமிழக நிலத்திற்கு உரித்தான மூலிகைகள், மலைப்பகுதி, காடுகள், நீர்ப்படிகைகள் (ஆறு, குளம்) காணப்படுகின்றன. செடி, கொடி, மரவகைகள் சித்த மருத்தவத்தின் அடிப்படைப் பொருளாக பயன்படுகின்றன.

ஓலைச்சுவடிகள் அனைத்தும் தமிழில் அமைந்திருப்பதுடன் தமிழகத்திலே வழங்கியும் வரப்படுகின்றன.

தமிழ்மொழி, தமிழ் மக்கள் வாழ்க்கையிலும் வருவதனால் சித்தமருத்துவம், தமிழ் மருத்துவம் என்பதையும் அடிப்படையாக கொள்ளலாம்.

தென்னாட்டு சித்தமருத்துவ வளர்ச்சிக்கு காரணமாக அமைந்தவர்கள் சித்தர்கள். சித்தமருத்துவ மூல நூர்ல்கள் பெருமை பொருந்தியது. ஏனெனில் அவை பெருமை வாய்ந்த அட்டமா சித்திபெற்ற சித்தர்களால் எழுதப்பட்டவையாகும். அவர்கள் காய சித்தியும், உயிர் சித்தியும் அடைந்து சித்த மருத்துவ நூல்களை வெளியிட்டார்கள்.

சித்த மருத்துவமானது

1. வாதம் (இரசவாதம்)
2. வைத்தியம்
3. யோகம் (அட்டாங்கயோகம்)
4. ஞானம்

எனும் 4 பகுதியை உள்ளடக்கிய விசாலமான வைத்தியம் ஆகும். சித்தர்கள் இந் நான்கிலும் அறிவைப் பெற்றவர்கள். செயல்களை செய்வதற்கு சித்த மருத்துவ கோட்பாட்டில் **பஞ்சபூதக் கொள்கை** அடிப்படையாக அமையும்.

## 1. வாதம்

வாதம் என்றால் 'இரசவாதம்' என்பதைக் குறிக்கும். உலோகங்களை குறிப்பாக இரும்பை பொன்னாக மாற்றுவதாக கருதுவோர் பலர். வேறு சிலர் தாதுப் பொருட்களை பஞ்சபூத தத்துவப்படி சேர்த்தல், பிரித்தல் முதலிய விளக்கங்களை கூறுகின்றனர்.

இரச வாதங்களைப் பற்றி தெளிவாக அறிந்து கொண்டால்தான் ஒருவன் வைத்தியனாக முடியும் என்பது சித்தர் கூற்று. 'வாதி வைத்தியன்' எனும் பழமொழி இதனையே உணர்த்துகின்றது. இக்கலையை எல்லோரும் பயின்று அறிந்தால் மருத்துவம் செய்வதை விட்டுவிட்டு தங்கம் செய்ய முயற்சிப்பர். அத்தகைய நிலை ஏற்படுவது தவறு என உணர்ந்து சித்தர்கள் தங்கள் சீடர்களுக்கு கற்றுக் கொடுத்த இரசவாத முறைகளை வேறு நோக்கத்திற்காக பயன்படுத்தக் கூடாதென உணர்த்தியுள்ளார்கள்.

"என் மகனே என் மேல் ஆணை, என் மேல் ஆணை,
புல்லர் என்ற புல்லரிடம் நூல் காட்டாதே"

## 2. வைத்தியம்

வைத்தியமானது நோய்களை கண்டறிவதும், அதற்குரிய சிகிச்சை முறைகளையும் உள்ளடக்கியது. மூலிகைகள், உலோகங்கள்,

உபரசங்கள், பாடாணங்கள், நவபாசாணங்கள், நவமணிகள், ஜீவவகுப்புக்கள் என்பன அடங்கியுள்ளன.

### 3. யோகம்

அட்டாங்க யோகம் முதலிய யோகப் பயிற்சிகளை குறிக்கின்றது. ஒரு வைத்தியன் இம் முறைகளால் தன்னை மேம்படுத்தி உயர்நிலைக்கு வந்தால் தான், இவ்வுலகை/ இப்பிரபஞ்சத்தைப் பற்றி தெளிவாக அறிய முடியும். அவ்விதம் அறிந்தால் தான் தன்னை சுற்றி உள்ளவர்களின் குறைகளை சரிவர அறிந்து அவற்றிற்கு உகந்த முறையில் சிகிச்சையளிக்க முடியும். அவர்களையும் ஆன்மீக நிலையையும் மேலுயர்த்த முடியும்.

### 4. ஞானம்

ஞானம் என்றால் பேரறிவு. அதாவது உண்மைப் பொருளை பற்றிய அறிவு (மெய்ப்பொருள் - தத்துவம் / தத்துவஞானம்). உண்மைப்பொருள் என்று இங்கே கருதுவது எதை என்றால் இப்பிரபஞ்சத்தை (Universal) பற்றிய அறிவாகும். அதற்கு அப்பாலும் ஏதாவது உண்டாவென அறிதலாகும்.

மனிதர்களாகிய நாம் இப் பிரபஞ்சத்தில் (ஒரு பகுதியாகிய பூமியில்) வாழ்கின்றோம். எனவே நாமும் இப் பிரபஞ்சத்தின் ஓர் அங்கம். பிரபஞ்சத்தில் உள்ளவை யாவும் மனித உடலில் ஏதோவொரு வகையில் உள்ளடங்கியுள்ளன. எனவே தான் பிரபஞ்சத்தை பேரண்டமாகவும் (Macrocosm) மனிதனை சிற்றுருவமாகவும் (Microcosm) கருதப்படுகிறது. எனவே பிரபஞ்ச தத்துவத்தை தெளிவாக விளங்கிக் கொள்வதனால் மனித உடல் தத்துவத்தினையும் விளங்கிக் கொள்ள முடியும்.

''அண்டத்திலுள்ளதே பிண்டம்
பிண்டத்திலுள்ள்தே அண்டம்
அண்டமும், பிண்டமும் ஒன்றே
அறிந்து தான் பார்க்கும் போதே''
(சட்டமுனி ஞானம்)

விஞ்ஞானிகள் தற்போது தசை, என்பு, நரம்பு முதலியவற்றாலான பௌதிக உடம்பு (Physical body) பற்றிய தமது ஆராய்ச்சிகளை

முன்னெடுத்து வருகின்றனர். ஆனால் சித்தர்களோ தத்துவங்களால் ஆக்கப்பட்ட அக உடம்பு பற்றியும் நுட்பமாக ஆராய்ந்து கூறியுள்ளனர்.

ஆத்மாவின் வீடுபேறு/ முக்திக்கு உதவும் ஒரு கருவியாக புற உடம்பு கருதப்படுகிறது.

வாதம் வைத்தியம், யோகம் என்பவற்றை விளங்கிக்கொள்ள அறிவு அவசியமாகும். அந்த அறிவே தத்துவ விஞ்ஞானமாகும். அவ்விதம் உண்மைப் பொருளான தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்கள் தத்துவ ஞானிகள் என அழைக்கப்படுகின்றனர். தற்காலத்தில் தத்துவம் வேறு சமயம் வேறு என்றில்லாமல் மீண்டும் பின்னிப்பிணைந்து மக்களின் வாழ்க்கையுடன் கலந்து காணப்படுகிறது. சித்த மருத்துவம் தமிழ் நாட்டிலே உருவாகி அங்கே கடைப்பிடிக்கப்பட்டு வருவதால் இதனை **தமிழ் மருத்துவம்** என்று அழைக்கப்படுகிறது.

மனித யாக்கைக்கும், உள்ளத்துக்கும், ஆன்மாவுக்கும் வேண்டிய ஒருங்கிணைந்த மருந்து சிகிச்சை செய்யும் கலையே சித்தமருத்துவமாகும். மேலும் மனிதனை வாதம், வைத்தியம், யோகம், ஞானம் ஆகிய மார்க்கங்களை செலுத்தி உடலுக்கு மருத்துவம் செய்து உடலைக் கருவியாக வைத்துக்கொண்டுள்ள ஆன்மாவை பரமாத்மாவுடன் கலந்து பேரின்பம் காண வழி கோருவதே சித்தமருத்துவ விஞ்ஞானத்தின் சிறப்பம்சமாகும். இதனை திருமூலரின் திருமந்திரத்தால் உணரலாம்.

“உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுள்ளே உறு பொருள் கண்டேன்
உடம்பினுள்ளே உத்தமன் கோவில் கொண்டேன்
உடம்பினை யானிருந்தே ஓம்புகின்றேன்”

## சித்தமருத்துவக்கோட்பாடு

சித்த மருத்துவக் கோட்பாடு ஐம்பூதக்கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. இவ்வுலகிலுள்ள உயிருள்ள, உயிரற்ற அனைத்துமே பஞ்சபூதங்களால் உருவானவை. உடலில் தோன்றும் நோய்களுக்கு காரணமாக அமைபவை, அந்நோய்களை தீர்க்கும் மருத்துவப்பொருட்கள், மருந்துகள் யாவும் பஞ்சபூதசேர்கையால் உருவானது. சுருக்கமாக கூறின் ஐம்பூதக்கூட்டே உலகத்தின் ஆதியும் அந்தமுமாகும்.

# சித்தர்களின் மகிமை

சித்தர் என்ற சொற்பதம் ‘‘சித்தி’’ எனும் சொல்லிலிருந்து பெறப்பட்டது. இதனுடைய நேரடியான இலக்கியக் கருத்து யாதெனில் **பூரணமான வெற்றி/ பூரணத்துவம்** போன்றவற்றைக் குறிக்கும். ஆன்மீகத்துறையில் இறுதிக்கட்டத்தை அடைந்த நிலையையும் இச் சொல் குறிக்கும். இருவகைப்பட்ட நல்லெண்ணங்களில் வழிப்பிறந்த குறிக்கோளை புத்தி வகுத்து தர இதன் பால் சித்தத்தை செலுத்தி முயன்று வெற்றி காண்பதையும் ‘‘சித்தி’’ என கூறலாம். எனவே மனம், புத்தி, சித்தம் என்ற அந்தக்கரணங்களை சேர்க்கவல்ல திறமையுடையவர்கள் சித்தர்கள் ஆவார்.

8% ஆன அதீத சக்தி/ இயற்கையை மீறிய ஆற்றல்களே ‘‘சித்து’’ எனப்படும். சித்தர்கள் இத்தகைய செயற்கரிய செயல்களை செய்வதில் கைவரப்பெற்றவர்கள். சித்தர்கள் தமது அளப்பெரும் சக்தியின் மூலம் தமது உடலின் நிலையை நீண்ட காலம் அழியாது பேணினார்கள். அவர்கள் ஐயம் திரிபற சகலவிதமான உலோகங்கள், உபரசங்கள், பாடாணங்கள் போன்றவற்றின் பௌதிக, இரசாயன குணங்களை நன்கு கற்றறிந்தார்கள்.

சரீரம் / உடல் ஒன்றின் உதவியுடனே ஓர் மனிதன் சித்தமருத்துவத்தின் நோக்கமான நிலையான இன்பம் /ஆன்மீக பரிணாமத்தை பெறலாம் என்பதை அசைக்கமுடியாத உண்மையாக கருதினார்கள். எனவே உடலானது நரை, திரை, பிணி, மூப்பு, சாக்காடு என்பவை அணுகாமல் இருப்பதற்கு சிவனால் அறியச்செய்யப்பட்ட சித்த மருத்துவத்தை பேணிப் பாதுகாத்து வளர்த்தார்கள். இவர்களும் இந் நிலைகளை அடையாமலிருந்து அருள்பாலித்தார்கள்.

பெரும்பான்மையான சித்தர்கள் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள். இவர்கள் சிவநெறியை பூண்டு ஒழுகிய சித்தசமயத்தை சேர்ந்த மக்களில் ஒருசிலர் வேறு நாட்டை சேர்ந்தவர்கள். கலைகள், ஞானம், சித்தமருத்துவம் போன்றவற்றை அறிவதற்காக இந்தியாவிந்கு வந்தார்கள். போகர், அழுகண்ணி, காளாங்கி போன்ற சித்தர்கள் சீன தேசத்தை சேர்ந்தவர்கள். பூனைக்கண்ணர் எகிப்து நாட்டையும், உரோமரிசி உரோம நாட்டையும் சேர்ந்தவர்கள். வைத்திய தொழிலை தவிர தாவரவியல், சோதிடம், வான சாஸ்திரம், பூமி சாஸ்திரம், பட்சி சாஸ்திரம், மாந்திரீகம், இரசவாதம், கன்ம சாந்தி, கன்ம பிரதிஷ்டை போன்றவற்றிலும் வல்லுனர்களாக திகழ்ந்தனர்.

ஆரம்பத்தில் சித்த மருத்துவம் குரு சிஷ்ய முறையில் பயிற்றுவிக்கப்பட்டது. பின்னர் படிப்படியாக ஓலைச்சுவடிகளில் (Manuscripts) எழுதப்பட்டது. இச் சுவடிகள் பரம்பரை பரம்பரையாக கையளிக்கப்பட்டு வந்தன.

சித்த மருத்துவ நூல்கள் பெரும்பாலும் பாடல்களாக காணப்பட்டன. இவற்றை சித்தர் பாடல்கள் என அழைப்பர். இப் பாடல்களில் **பரிபாஷைச் சொற்கள்** பயன்படுத்தப்பட்டன.

சித்தர்கள் கூறுகின்ற ஒழுக்கமுறைகளைக்கு கீழ் கட்டுப்படாமல் இருப்பவர்களை பாவிகள் என அழைப்பர். அவர்களிற்கு தெரியக் கூடாது என்பதற்காகவே பரிபாஷை சொற்கள் பயன்படுத்தப்பட்டன. அவர்களால் மருத்துவமும், மருத்துவத்திற்குரிய நற்பெயரும் அழியக்கூடாது என்பதை கருத்திற்கொண்டே அவ்வாறு உரைத்துள்ளனர்.

சித்தர்கள் ஆத்மஞானம் ஒன்றையே கடைப்பிடித்து எவ்வகைப் பொருட்களால் உடல் வளர்ந்து, அழிகின்றது என்பதை ஊகத்தாலும், முயற்சியாலும் கண்டறிந்து உடம்பை மெய் என்று கூறியுள்ளனர்.

அனிமா, மகிமா போன்ற அட்டாங்க சித்திகளை அடைந்தவர்கள் மேலும் தங்களுடைய உடம்பை மாத்திரம் தகுந்தபடி பலப்படுத்திக் கொண்டால் பிறப்பு, இறப்பு முதலியவற்றிலிருந்து நீங்கி விடலாம் என்பதை உணர்ந்து நித்திய வாழ்வை பெற்ற மகான்கள் ஆவர். இவர்கள் காயகற்ப வழி (காய சித்தி), யோக சாதனை (யோக சித்தி) ஆலும் அபார சித்தி பெற்றவர்களாவர். அழியக்கூடிய உடலைக் கொண்டே ஞானசக்தியில் மோட்ச சாதனர வழியை தேடக்கூடியவர்கள்.

மேலும் அவர்கள் மூச்சை அடக்கி மூலத்தனலாகிய குண்டலினி சக்தியை எழுப்பி மணி, மந்திரம், மருந்துகளின் உதவியால் மாறாத மதி அமுதம் உண்டவர்கள். இதனால் நரை, திரை, பிணி, மூப்பு, சாக்காடு என்பவற்றை அறியாது நித்திய உடம்பைப் பெற்றவர்கள்.

**சித்தர்களிடம் காணப்பட்ட அபாரசக்திகள்**

1. தூரத்தில் நடப்பவற்றை கூறல்.

2. இரசக்குளிகைகள் / ககணக் குளிகைகள் கொண்டு அநேக அண்ட சராசரங்களை கண்டு சுற்றி ஆங்காங்கே உள்ள அதிசயங்களை கண்டு இன்புற்றனர்.

3. அவர்களுடைய ஆன்மா கூடு விட்டு கூடு பாயும் இயல்பு கொண்டது. – பரகாயப் பிரவேசம்.

4. சித்தர்கள் தமது மனோசக்தியால் மருந்து கொள்ளாமலேயே உடம்பின் அணுவாதி தத்துவங்களை மாற்றி பிணி, சாக்காட்டை அகற்ற வல்லவர்கள்.

5. தமது மனோசக்தியை நினைத்தபடி நாடி வழியாக செலுத்தாமலே மின்சாரசக்தியைப் போல அண்டம் முழுவதும் பலவிடயங்களை உட்கார்ந்து இருந்தபடியே தெரிந்து கொள்வார்கள்.

6. எங்கேயும், யாருடனும் சம்பாசிக்க கூடிய வல்லமை பெற்றவர்கள்.

7. இறந்தவர்களை உயிர்ப்பிக்க வல்லவர்கள்.

8. ஆரோக்கியத்தை பேணல் / மீண்டும் புதுப்பித்தல்.

சித்தர்கள் யாவரும் வாதம், வைத்தியம், யோகம், ஞானம் எனப்படும் நான்கிலும் சித்தி பெற்றவர்கள். உடல் அழிந்தால் சித்தமருத்துவத்தின் நோக்கத்தை அடையமுடியாமல் அனேக பிறவிகளை அடைய வேண்டிவரும் எனக்கருதி மேற்கூறிய துறையில் உழைத்து வெற்றி கண்டுள்ளனர்.

**By: Dr. (Ms.) V. Sanmugarajah, BSMS, PhD,**
**Senior Lecturer, Gr. II**

# ஈழத்து சித்தமருத்துவ நூல்கள்

## 1. பரராசசேகரம்

தமிழ் மருத்துவநூல், முதன்மையான மூலநூல், 1200 பாடல்கள் கொண்டது. தற்போது சில 1000 பாடல்கள் காணப்படுகிறது. இதனை ஏழாலை சுதேச வைத்தியர் ஐ.பொன்னையா 7 பாகங்களாக எழுதியுள்ளார்.

இந்நூலாசிரியரின் மூன்று விதமான கருத்துக்கள்,

1. பரராசசேகர மன்னனால் இயற்றப்பட்டது.
2. மன்னனின் வேண்டுகோளின்படி மருத்துவ புலவரால் இயற்றப்பட்டது.
3. மன்னனின் வேண்டுகோளின்படி பலர் சேர்ந்து தொகுத்தனர்.

கி.பி 14 - 17ம் நூற்றண்டில் இருந்துள்ளது என்பது ஆய்வாளர் கருத்து. செய்யுள் வடிவத்தில் பாடல்கள் காணப்படுகின்றது. உரை வடிவில் மருத்துவ விளக்கம் கூறப்பட்டது.

- 1ம் பாகம் - சிரோரோகநிதானம் - கபாலரோகம்,மூளைநோய்
- 2ம் பாகம் - பாலரோகம், கற்பரோகம்
- 3ம் பாகம் - சுரம், சன்னி, வலி, வீக்கம், வாந்திரோகம்
- 4ம் பாகம் - வாத, பித்த, கப ரோகங்கள் - 80 : 40 : 20
- 5ம் பாகம் - மேகரோகம் - பிளவை, வர்மவிதி, இரட்சைவிதி
- 6ம் பாகம் - உதரரோகம் - குன்மம், சூலை, பாண்டு, காமாலை
- 7ம் பாகம் - மூலரோகம் - அதிசாரம், கிரகணி, வயிற்றோட்டம், கிரந்தி,கரப்பன், குஸ்டம்

மேலும் நூலில் சிகிச்சைமுறை, மருந்துவகை, அனுபானம், பத்தியாபத்தியம், சாத்திய அசாத்திய ரோகம் என்பனபற்றியும் கூறப்பட்டுள்ளன.

## 2. செகராசசேகரம்

யாழ் மன்னனின் பெயரால் வந்தது. நோய் பற்றியும், சிகிச்சை முறைபற்றியும் கூறப்படடுள்ளது. மூலநூல் - 4000 பாடல்கள் தற்போது 100 பாடல்கள் வரை காணப்படுகின்றது. பரராசசேகரத்திற்கு காலத்தால் முந்தியது. இதனை அச்சுவேலி ச. தம்பிமுத்து பிள்ளை எழுதினார். இங்கு நோய்சிகிச்சை முறைகள், நாடி மருத்துவ விதி, நோயின் பெயர்,

நோயின் குறிகுணம், அனுபானம், பத்தியாபத்தியம், குடோரி மருந்துகள் பற்றி கூறப்பட்டுள்ளது.

**3. அங்காதி பாதம்** - ஐ.பொன்னையா

மூலநூல் 400 - தற்போது 175 பாடல் காணப்படுகின்றது. மனித உடலைப்பற்றியும், உடலமைப்பற்றியும் விளக்கிட கூறும் நூல். உடலமைப்பு மட்டுமன்றி உடல் தொழில்பற்றியும் கூறப்பட்டுள்ளது. நாடிப்பரீட்சைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

**4. அமுத சாகரம்**

நஞ்சியல் பற்றி வெளிவந்த முதலாவது நூல், ஈழத்து சித்த மருத்துவ நூல், 250 ஆண்டுகளுக்கு முன் சுன்னாகம் அ. வரதபண்டிதரலால் எழுதப்பட்டது.

**5. இருபாலைச்செட்டியார் - வைத்திய விளக்கம்** - ஐ.பொன்னையா

முதலாவது மீள்பதிப்பு - அமிர்த சாகரம், பதார்த்த சூடாமணி
அமிர்த சாகரம் - நாடிகளின் தோற்றம், தொழில், சுரவகை, சிகிச்சை பற்றியும் பதார்த்த குடாமணி உடம்புடன் இசைந்து பயன்தரும் பொருட்களின் குணங்களையும் விளக்குகின்றது.

**6. சொக்கநாதர் தன்வந்திரியம்**

மாவிட்டபுரம் சொக்கநாதர் குருக்கள்
ஐ. பொன்னையா - பதிப்பு
உக்கிர காண்டம் - மானிட, அசுர, தேவ சிகிச்சை
சௌமிய காண்டம் - குழந்தை, கர்ப்பிணி, முதியோர், உடல் இளைத்தவர்களுக்கானது.

**7. வைத்திய சிந்தாமணி**

ஐ. பொன்னையா - பதிப்பு
அஷ்டவித பரீட்சை, சிலநோய்கள், வைத்திய இலக்கணம் மற்றும் மருந்துகள்

**8. சுதேச வைத்திய ஔடத திரட்டு**

பல மருந்துகள் அடங்கிய தொகுப்பு

யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு வைத்தியர்களால் மரபு வழியாக கையாளப்பட்டது.

**9. வைத்திய தெளிவு** - இருபாலைச்செட்டியார்

ஐ. பொன்னையா- பதிப்பு
பொதுவான நோய்கள், மருந்துகள், பத்தியங்கள பற்றிக் கூறப்பட்டுள்ளது.

**10. சித்த ஔடத சங்கிரகம்**

ஆயுள் வேத பெயரில் சித்த ஔடத செயன்முறைகள் பற்றிய அரசாங்ங வெளியீடு. ஈழத்து தமிழ்நூல்களின் தொகுப்பு.

**11. வைத்திய பூரணம்**

ஈழத்து மருந்துவ நூல் அல்ல. ஆனால் யாழ்ப்பாணத்தவரால் பெரிதும் கையாளப்பட்டது.

**12. கிறிஸ்தவ பண்டிதர் வைத்திய நூற்திரட்டு**

நாடிவிதி, பண்டிதர் இலக்கணம், மருந்து பற்றி கூறப்பட்டுள்ளது.

**By: Dr. (Ms.) V. Sanmugarajah, BSMS, PhD,**
**Senior Lecturer, Gr. II**